**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.219/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. விநாயகம் |
| Husband/Father Name | கிருஷ்ணன் |
| Village /Area | கீழ்வெங்கடபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | கூலி |
| Age | 40 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.08.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு தேதி நினைவு இல்லை. நான் வேலைக்கு சென்று வீட்டிற்கு வந்து நான் அணிந்திருந்த ஆடை லுங்கி மாற்றும் போது என் வீட்டில் இருந்த கதவில் லுங்கி மாட்டிக்கொண்டு கதவில் இருந்த தகடில் என்னுடைய உயிர் நாடி பகுதியில் காயம் பட்டது. உடனடியாக என் அண்ணன் மகன் குறிஞ்சி செல்வம் என்பவர் என்னை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்கைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நெமிலி போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அதசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் என்னிடம் எழுதாக தாளில் தான் கையொப்பம் பெற்றார்கள் அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**